# விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டது ‘திராவிட மாடல்’ அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அதேபோல், eSAKSHI போர்ட்டலில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளை நேரடியாகத் தொகுதிவாரியான சுருக்க அறிக்கையினை பதிவிறக்கம் செய்ய ஏதுவாக eSAKSHI போர்ட்டலை மேம்படுத்துமாறு ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கலாம் எனவும் இந்தக் குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படுகிறது.

பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டம் - ‘ஒரு துளி நீரில் அதிகப் பயிர்’ என்ற திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நுண்நீர் பாசன அமைப்புகள் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 55 விழுக்காடு மானியமும், மற்ற விவசாயிகளுக்கு 45 விழுக்காடு மானியமும் வழங்கப்படும்.

ஆனாலும், விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட நமது திராவிட மாடல் அரசு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து 100 விழுக்காடு மானியத்தை சிறு, குறு விவசாயிகளுக்கும், 75 விழுக்காடு மானியத்தை இதர விவசாயிகளுக்கும் வழங்கி வருகிறது. 12 விழுக்காடு சரக்கு மற்றும் சேவை வரியையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஊக்கத்தால் தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பயிர்கள் சாகுபடி பரப்பளவு அதிகப்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் வாயிலாக 2022-23ஆம் ஆண்டு 26 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்ட அளவினை உயர்த்தும் வகையில் 473 கிராமங்களில் 52,197 ஹெக்டரில் நுண்நீர்ப் பாசன அமைப்புகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தானியங்கி நுண்நீர்ப் பாசன அமைப்புகள் அமைத்திட ஒரு ஹெக்டருக்கு ரூபாய் 40 ஆயிரம் வீதம் சிறு, குறு விவசாயிகளுக்கு 55 விழுக்காடு மானியமாக ஹெக்டருக்கு ரூபாய் 22 ஆயிரம் வீதம் அதிகபட்சமாக 2 ஹெக்டருக்கும், இதர விவசாயிகளுக்கு 45 விழுக்காடு மானியமாக ஹெக்டருக்கு ரூபாய் 18,000 வீதம் அதிகபட்சமாக 5 ஹெக்டருக்கும் வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 1 இலட்சத்து 50 ஆயிரத்து 560 ஹெக்டர் நிலப்பரப்பில் 1 இலட்சத்து 57 ஆயிரத்து 279 விவசாயிகள் ரூபாய் 1,312 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதிப்பயன்களை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் திட்டப் பயன்களை விவசாயிகளுக்குக் கொண்டு சேர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

> “ ஒன்றிய அரசின் அனைத்து திட்டங்களிலும் மாநில அரசின் பங்குத் தொகை எவ்வித காலதாமதமுமின்றி விடுவிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், ஒன்றிய அரசும் தனது நிதியை சரியான நேரத்தில் மாநில அரசுக்கு வழங்கிட வேண்டும் என இக்குழு மூலமாகவே வலியுறுத்தப்படும் ”

“ஊட்டச்சத்து குறைபாடில்லாத குழந்தைகள் நிறைந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவதே” நமது முக்கிய நோக்கமாகும்.

**ஊட்டச்சத்து மேம்பாட்டு திட்டம்!**

- குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்த தமிழ்நாட்டில் செயல்படும் 54 ஆயிரத்து 449 குழந்தைகள் மையங்களில் பயன்பெற்று வரும் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான சுமார் 22 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துமாவு வழங்கப்படுகிறது. மேலும், சுமார் 5.50 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துமாவு வழங்கப்பட்டு தாய்-சேய் ஊட்டச்சத்து நடைமுறை கண்காணிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இத்திட்டம் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
- குழந்தைகள் மையங்களில் 2 முதல் 6 வயதிற்குட்பட்ட சுமார் 10 இலட்சத்து 86 ஆயிரம் குழந்தைகளுக்கு மதிய உணவுடன் வாரம் மூன்று தினங்களுக்கு முட்டைகளும்
- 1 முதல் 2 வயது வரையிலான 6 இலட்சத்து 75 ஆயிரம் குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டை வீதம் தாய்மார்கள் மூலம் வீட்டிலேயே வழங்கப்படுகிறது.
- அனைத்து குழந்தைகளுக்கும் 2 செட் வண்ணச்சீருடைகளும் நமது அரசு வழங்குகிறது. அனைத்து மையங்களிலும் 100 சதவீதம் குடிநீர், கழிவறைகள், மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இதுவரை 3,397 குழந்தைகள் நேய மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
- 6,390 குழந்தைகள் மையங்களை திறன்மிகு குழந்தைகள் மையமாக தரம் உயர்த்தி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- மேலும் 5,582 மையங்கள் தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நமது அரசின் முனைப்பான செயல்பாடுகளின் விளைவாக தமிழ்நாடு தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-5ன்படி 25 விழுக்காடாக இருந்த குழந்தைகளின் உயரக் குறைபாடு 11.8 விழுக்காடாக குறைந்துள்ளது.
- 14.6 விழுக்காடாக இருந்த குழந்தைகளின் மெலிவுத் தன்மை 3.6 விழுக்காடாக குறைந்துள்ளது.
- 22 விழுக்காடாக இருந்த குழந்தைகளின் எடை குறைவு 5.7 விழுக்காடாக குறைந்துள்ளது.
- குழந்தைகளின் வளர்ச்சி வீதம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது இதன் மூலம் தெள்ளத்தெளிவாகிறது.

**இயல்பு நிலைக்குத் திரும்பிய குறைபாடுடைய குழந்தைகள்!**

- “ஊட்டச்சத்தை உறுதி செய்” என்ற மகத்தான திட்டத்தின்படி முதற்கட்டமாக 1,07,006 ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளில் 77.3 விழுக்காடு குழந்தைகள் இயல்புநிலைக்குத் திரும்பி யுள்ளனர். இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக அரியலூர் மாவட்டத்தில் 15-11-2024 அன்று துவங்கப்பட்டு 76,705 குழந்தைகளுக்குக் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 0-6 மாதங்கள் வரையிலான குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு 80.6 சதவீத குழந்தைகள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளனர் என்பது உண்மையிலேயே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.
- நம்முடைய அனைத்து திட்டங்களும் கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடையும் நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஒன்றிய அரசின் அனைத்து திட்டங்களிலும் மாநில அரசின் பங்குத் தொகை எவ்வித காலதாமதமுமின்றி விடுவிக்கப் பட்டு வருகிறது. அதேபோல், ஒன்றிய அரசும் தனது நிதியை சரியான நேரத்தில் மாநில அரசுக்கு வழங்கிட வேண்டும் என இக்குழு மூலமாகவே வலியுறுத்தப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இதில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை-உழவர் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர்கள் தங்களது துறைவாரியான திட்டங்கள் தொடர்பான கருத்துகளை விளக்கினர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, தொல். திருமாவளவன், கே. சுப்பராயன், மாணிக்கம் தாகூர், சு. வெங்கடேசன், துரை வைகோ, நவாஸ்கனி ஆகியோர் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் நா. எழிலன், வி.ஜி. ராஜேந்திரன், நீலமேகம் ஆகியோரும், தன்னார்வலர்கள் தீபிகா மற்றும் கருணாகரன் ஆகியோரும் தங்களது கருத்துகளை தெரிவித்தனர். மேலும், மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் (DISHA) குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

நிறைவாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நன்றியுரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, தொல்.திருமாவளவன், கே. சுப்பராயன், சு. வெங்கடேசன், பி. மாணிக்கம் தாகூர், கே. நவாஸ் கனி, துரை வைகோ மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், மருத்துவர் நா. எழிலன், நீலமேகம், பூமிநாதன், அசன் மௌலானா மற்றும் கருணாகரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தலைமை தபால் அலுவலர், அலுவல்சாரா உறுப்பினர்கள் பி.ஜனகரத்தினம், டி. தீபிகா, பேட்ரிக் ராஜ்குமார் அந்தோணி சாமி மற்றும் அரசு சார்பற்ற அமைப்பு சார்பாக முனைவர் எஸ்.வி.முருகன் கலந்து கொண்டனர்.

---

### சின்னத்திரை – வண்ணத்திரை மூலம்

## தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர்!



### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, செப். 20-

சின்னத்திரை - வண்ணத்திரை மூலம் தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர் என்று அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திரைக்கலைஞர் ரோபோ சங்கர் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**திரைக்கலைஞர் ரோபோ சங்கர் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன். மேடைகளில் துவங்கி, சின்னத்திரை - வண்ணத்திரை என விரிந்து, தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர்.**

**அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் - கலையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### ‘தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன்’ – நாளை

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், செப். 20-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் இன்று (20.09.2025 -சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் சிதம்பரம் அனந்தீஸ்வர் கோயில் தெருவில் தந்தை பெரியார் 117 வது பிறந்தநாள், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், கழகம் தொடங்கிய நாள் ஆகிய முப்பெரும் விழா, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் தீர்மான விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும் என வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (செப்டம்பர் 20 சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சிதம்பரம் அனந்தீஸ்வர் கோயில் தெருவில் தந்தை பெரியார் 117 வது பிறந்தநாள், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், கழகம் தொடங்கிய நாள் ஆகிய முப்பெரும் விழா, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் தீர்மான விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

அது சமயம் இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக் குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA) மற்றும் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்கள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஒன்றியம், அரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த குப்பன் மகன் கலியபெருமாள் இரும்புக்குழாயை எடுக்க முயன்றபோது எதிர்பாராத விதமாக உயர்மின் அழுத்த மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் அறிவித்ததை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், வருவாய் கோட்டாட்சியர் அனந்தகுமார் சிங் ஆகியோர் கலியபெருமாள் இல்லத்திற்கு நேரில் சென்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ரூ.3 லட்சத்திற்கான காசோலையை அவரது குடும்பத்தினரிடம் வழங்கி, ஆறுதல் தெரிவித்தனர், இதில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

---

### ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’

## இராமநாதபுரத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இராமநாதபுரம், செப். 20-

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராம லிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின் படியும், தலைமைக்கழக அறிவிப்பின்படி, ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’, ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக் கூட்டம் நாளை (செப்டம்பர் 21, ஞாயிற்றுக்கிழமை), மாலை 4.30 மணியளவில், இராமநாதபுரம் நகராட்சி, அரண்மனை அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. மண்டல தேர்தல் பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆலோசனைப்படி நடைபெறும் மேற்கொண்ட பொதுக்கூட்டத்தில் வனத்துறை மற்றும் கதர் வாரியத் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ். இராஜகண்ணப்பன், தலைமைக்கழக பேச்சாளர் வழக்கறிஞர் மதிவதனி அவர்களும், தொகுதி பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச் சாவடி முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), வாக்கு சாவடி அளவிலான மின்னணு முகவர்கள் (Booth Level Digital Agent) BDA உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### தலைமைக் கழகப் பேச்சாளர்

## கோடையிடி குற்றாலம் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



மதுரை, செப். 20-

முகவை மாவட்ட நாடக நடிகர் சங்கத் தலைவரும், கமுதி, வேலாங்குளம் எஸ்.கே.ஆனந்தன், எஸ்.கே. இசையரசன் ஆகியோரின் தந்தையும், தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளருமான கோடையிடி குற்றாளம் நேற்று (19.09.2025-வெள்ளி) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து ஏராளமான கழகத்தினர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (20.09.2025 - சனிக்கிழமை) பகல் 12 மணியளவில் கமுதி, காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.